RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 73 | மார்ச்.22 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# திமுக அரசின் சாதனைகள் குறித்து இடைவிடாது பிரச்சாரம் செய்ய வேண்டும்

## தொண்டர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

சென்னை: மார்ச்.23-

திமுக அரசின் சாதனைகளையும், அதனால் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் கிடைத்துள்ள பயன்களையும் இடைவிடாது பிரச்சாரம் செய்யும் பணியை ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும் என்று திமுக தொண்டர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது: தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட மறுநாளே மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தை நடத்தி, தேர்தல் பணிகளை எப்படி மேற்கொள்ள வேண்டும் என்பதை உங்களில் ஒருவனான நான், உங்களின் குரலாக எடுத்துச் சொன்னேன். வெற்றி நிச்சயம்.

அதற்கான இலக்கை அடைய சமரசமின்றி உழைப்பது ஒன்றே லட்சியம். அந்த உறுதியுடன்தான் திமுக தனது தோழமைக் கட்சிகள் அடங்



கிய மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியுடன் 2026 சட்டப்பேரவை தேர்தல் களத்தை சந்திக்கிறது.

சொன்னதைச் செய்யும் திமுக அரசு, சொல்லாத திட்டங்களையும் நிறைவேற்றியுள்ளது. 2026 சட்டப்பேரவை தேர்தல் களத்துக்கான திமுகவின் தேர்தல் அறிக்கை வெகு விரைவில் வெளியாக உள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் நாட்டில் எந்த மாநிலமும் செய்ய முடியாத சாதனை திட்டங்களையும், பல மாநிலங்கள் பின்பற்றக் கூடிய முதன்மையான திட்டங்களையும் திமுக அரசு நிறைவேற்றியுள்ளது.

இந்த சாதனைகளையும், அதனால் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் கிடைத்துள்ள பயன்களையும், அவர்களது வாழ்வில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும் இடைவிடாது பிரச்சாரம் செய்யும் பணியை ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும்.

2026 தேர்தல் களத்தை தமிழகம் அணிக்கும், டெல்லி அணிக்குமான தேர்தல் என்று தொடர்ந்து கூறிவருகிறேன். டெல்லியில் இருந்துதான் எல்லாம் முடிவு செய்யப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள வீடுகளில் அடுப்பு எரிந்தால் என்ன, எரியாவிட்டால் என்ன என்ற மனநிலையுடன்தான் எதிர்க்கட்சியினர் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

தமிழகத்தின் உரிமைகளைக் காப்பதற்கும், தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்குமான வலிமை திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கே உண்டு என்பதே மக்களின் உறுதியான நம்பிக்கை.

அந்த நம்பிக்கையை உருவாக்கியது திமுக ஆட்சி. அதனால் நாம் மக்களிடம் செல்வோம். களத்தில் நின்று வெற்றியைப் பெறுவோம். திமுக அரசு தொடர்ந்து அமைய 2026 தேர்தல் களத்தில் நிச்சயம் வெல்வோம் என உறுதி கொள்கிறேன், உங்களின் அயராத உழைப்பின் மீதுள்ள நம்பிக்கையால். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## “தமிழ்க் கடலில் தாமரை மலர முடியாது” காதர் மொய்தீன் கருத்து

திருச்சி: மார்ச்.22-

“தாமரை வளர்வது குளத்திலும் குட்டையிலும்தான். ஆனால், தமிழகம் ஒரு பெருங்கடல். இந்த தமிழ்க் கடலில் தாமரை மலர முடியாது” என இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொய்தீன் தெரிவித்துள்ளார்.

திருச்சி கன்டோன்மென்ட் ஈத்கா மைதானத்தில் ஆற்காடு நவாப் நினைவு அறக்கட்டளை சார்பில் ரம்ஜான் சிறப்பு தொழுகை இன்று நடைபெற்றது. இதில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீன், அறக்கட்டளை மக்கள் தொடர்பு அலுவலர் பஷீர் அகமது, முஸ்லிம் இலக்கிய மன்றத்தின் பொதுச் செயலாளர் கவிஞர் சையது ஜாபர் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் காதர் மொய்தீன் கூறியது: “உலகம் முழுவதும் உள்ள அனைவருக்கும் ரம்ஜான் வாழ்த்துகள். புனித ரமலான் மாதத்தில் நாம் எல்லோரும் இறைவனை வேண்டுவது உலக அமைதி நிலைக்க வேண்டும் என்பதற்காகத்தான். உலக அரசியல் சூழ்நிலை கவலை அளிக்கும் வகையில் உள்ளது.

இன்று உலகம் மிகக் கடினமான சூழ்நிலையை சந்தித்து வருகிறது. அமெரிக்கா, இஸ்ரேல் ஈரான் நாடுகளுக்கு இடையேயான பதற்றம் உலக மக்களை பாதித்து வருகிறது. இந்தச் சூழலில் அனைத்து நாடுகளும் அமைதியை முன்னிறுத்த வேண்டும். உலகுக்கு இன்று தேவையானது போர் அல்ல, அமைதிதான்.

நேற்று வரை நான்கு முனைப் போட்டியாக இருந்த தேர்தல், தற்போது ஐந்து முனை போட்டியாக மாறியுள்ளது. புதிய கூட்டணிகள் உருவாவது ஜனநாயக நாட்டில் இயல்பான ஒன்றுதான். இன்னும் பலமுனை போட்டிகளாக கூட மாறலாம்.

யாரும் தேர்தலில் போட்டியிடலாம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முன்னேற்ற கூட்டணி மிகவும் வலிமையானது. ஐந்து ஆண்டுகளில் நடைபெற்ற திராவிட மாடல் ஆட்சியால் 80%க்கும் மேற்பட்ட மக்கள் திருப்தி அடைந்துள்ளனர். இந்த ஆட்சி தொடர வேண்டும் என்ற எண்ணம் மக்களிடம் உள்ளது.

எந்த அளவுக்குப் போட்டி இருந்தாலும், இந்த தேர்தலில் திமுக கூட்டணிக்கே வெற்றி வாய்ப்பு அதிகம். அதிமுக கூட்டணி குறித்து அடிக்கடி டெல்லி சென்று பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். ஆனால், இங்கு வந்து கூட்டணி குறித்து தெளிவாகப் பேசுவதில்லை. இது, தமிழக முதல்வர் கூறியதுபோல, இந்த தேர்தல் தமிழ்நாட்டுக்கும், டெல்லிக்கும் இடையிலான போட்டியாக மாறி வருகிறது என்பதை காட்டுகிறது.

தமிழகத்தில் திராவிட சிந்தனை, தமிழ்ப் பண்பாடு வேரூன்றி உள்ளது. இந்த மண்ணில் பாஜக கொள்கைக்கு இடமில்லை. தாமரை வளர்வது குளத்திலும் குட்டையிலும் தான். ஆனால் தமிழகம் ஒரு பெருங்கடல். இந்த தமிழ்க் கடலில் தாமரை மலர முடியாது” என்றார்.

## நெடுங்காட்டில் மீண்டும் என்.ஆர்.காங்கிரஸ்? ‘தீவிரம்’ காட்டிய பாஜகவுக்கு ஏமாற்றம்!

காரைக்கால்: மார்ச்.22-

காரைக்கால் மாவட்டத்தில் நெடுங்காடு தொகுதியில் போட்டியிட பாஜக பகீரத பிரயத்தனம் செய்து வந்த நிலையில், அந்தத் தொகுதி கூட்டணியில் மீண்டும் என்.ஆர்.காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளாத கூறப்படுகிறது.

காரைக்கால் மாவட்டத்தில் உள்ள 5 சட்டப் பேரவைத் தொகுதிகளில் தற்போது காரைக்கால் தெற்கு, நிரவி திருப்பட்டினம் தொகுதிகள் திமுக வசமும், காரைக்கால் வடக்கு, நெடுங்காடு தொகுதிகள் என்.ஆர். காங்கிரஸ் வசமும், திருநள்ளாறு தொகுதி சுயேச்சை வசமும் உள்ளன.

நிரவி திருப்பட்டினம், திருநள்ளாறு ஆகிய தொகுதிகளில் கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த பாஜக, வரும் தேர்தலில் ஏற்கெனவே போட்டியிட்ட தொகுதிகளுடன் கூடுதலாக நெடுங்காடு தொகுதியிலும் போட்டியிட தீவிரம் காட்டி வந்தது.



அதற்கேற்ப பாஜக நிர்வாகிகள் அத்தொகுதியில் தற்போது எம்எல்ஏவாக உள்ள சந்திரபிரியங்காவுக்கு எதிராகவும், அவரை விமர்சித்தும், தொகுதி வளர்ச்சியடையவில்லை என்றும் தீவிரமாக பிரச்சாரம் மேற்கொண்டு வந்தனர். வீடுவீடாகச் சென்று மக்களை சந்தித்தும், தெருமுனை கூட்டங்கள் நடத்தியும் இம்முறை தங்களுக்கு ஆதரவு அளிக்குமாறு கேட்டு வந்தனர்.

இதனிடையே கடந்த பிப்ரவரி மாதம் காரைக்காலுக்கு வந்த மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, நெடுங்காடு தொகுதிக்கு உட்பட்ட கோட்டுச்சேரியில் சுவர் விளம்பரத்தில் தாமரை சின்னம் வரைந்து பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார். இதனால், அந்தத் தொகுதி எப்படியும் தங்களுக்கு கிடைத்துவிடும் என பாஜகவினர் நம்பியிருந்தனர்.

இதனிடையே, புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ் பாஜக இடையே நீண்ட இழுபறிக்குப் பின்னர், கூட்டணி பேச்சுவார்த்தை நேற்று மாலை முடிவுக்கு வந்தது. அதில் காரைக்கால் மாவட்டத்தில் என்.ஆர்.காங்கிரஸ் கட்சிக்கு கடந்த முறை போட்டியிட்ட காரைக்கால் வடக்கு, நெடுங்காடு ஆகிய தொகுதிகளுடன் காரைக்கால் தெற்கு (இங்கு கடந்த முறை அதிமுக போட்டியிட்டது) என 3 தொகுதிகளும், பாஜகவுக்கு கடந்த முறை போட்டியிட்ட திருநள்ளாறு, நிரவி திருப்பட்டினம் ஆகிய 2 தொகுதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

தற்போது என்.ஆர்.காங்கிரஸ் வசம் உள்ள நெடுங்காடு உள்ளிட்ட சில தொகுதிகளை பாஜகவுக்கு விட்டுத்தர மறுத்ததும், என்.ஆர். காங்கிரஸ் பாஜக இடையே நீடித்து வந்த கூட்டணி இழுபறிக்கான பல்வேறு காரணங்களுள் ஒன்றாக கூறப்பட்டது.

நெடுங்காடு தொகுதி எப்படியும் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுவிடும் என்று உறுதியாக நம்பி வந்த பாஜக நிர்வாகிகள் உள்ளிட்ட தொண்டர்கள் மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளனர்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் என்.ஆர்.காங்கிரஸ் கட்சிக்கு இத்தொகுதி ஒதுக்கப்பட்டால், நேற்று முன்தினம் வரை எதிரெதிர் துருவங்களாக நின்று தீவிர தேர்தல் களப்பணியாற்றியவர்கள் தற்போது ஒருங்கிணைந்து கூட்டணி வேட்பாளர் வெற்றிக்கு உறுதுணையாக களப்பணியாற்றுவார்களா என்ற கருத்தும் பேசப்படுகிறது.

இதனிடையே, கூட்டணி பேச்சுவார்த்தை முடிவடையும் முன்பே இந்தத் தொகுதியில் என்.ஆர். காங்கிரஸ் சார்பில் சிட்டிங் எம்எல்ஏ சந்திர பிரியங்கா வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



■ அஇஅதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த ஓபிஎஸ் அணியின் முக்கிய நிர்வாகிகள் திரளாக அஇஅதிமுகவில் இணைந்தனர். மாவட்ட செயலாளரும், எம்எல்ஏவுமான செந்தில்நாதன் முன்னிலையில் நடைபெற்ற இந்த இணைப்பில், நிர்வாகிகள் எடப்பாடி பழனிசாமிக்கு பூங்கொத்து வழங்கி கட்சியில் இணைந்தனர். இணைந்தவர்களில் க.அய்யாசாமி, வி.சண்முகம், அ.கனகராஜா, எஸ்.தியாகராஜன், கே.வி.சேகர், கீர்த்தனா கனகராஜா, சுப.ராசு, பாலசுப்ரமணியன், கே.ஆர். பால்பாண்டியன், கண்ணன், பாலமுருகன், சசி உடையப்பன், தயாநிதி, முரளி கண்ணன் உள்ளிட்டோர் அடங்குவர். இணைந்த அனைவரையும் எடப்பாடி பழனிசாமி வாழ்த்தி வரவேற்றார். இந்த இணைப்பு மூலம் சிவகங்கை மாவட்டத்தில் கட்சிப் பணி மேலும் வலுப்படும் என நிர்வாகிகள் தெரிவித்தனர்.

## திருமங்கலத்தில் உதயகுமாருக்கு ‘ஹாட்ரிக்’ வெற்றி கிடைக்குமா? : 2009 இடைத் தேர்தலுக்கு பிறகு வெற்றி பெறாத திமுக

மதுரை: மார்ச்.22-

2009 இடைத்தேர்தலுக்குப் பிறகு திருமங்கலம் தொகுதியில் வெற்றிபெறாத திமுக, இந்த முறை சேடபட்டி முத்தையா மகன் மணிமாறனை வெற்றிபெற வைக்க முதல்வரின் மருமகன் சபரீசனே நேரடியாக களம் இறங்கியுள்ளார்.

மூன்றாவது முறையாக களமிறங்கும் அதிமுகவின் ஆர்.பி.உதயகுமாருக்கு ஹாட்ரிக் வெற்றி கிடைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இடைத்தேர்தல் வரலாற்றில் திருமங்கலம் புதிய பார்முலாவை ஏற்படுத்திய தொகுதி. 2009 ல் நடந்த இடைத்தேர்தலில் வாக்காளர்களுக்குப் பரிசுப்பொருட்கள், பணம் என்ற மோசமான வரலாறு உருவானது.

அந்தத் தேர்தலில் மு.க.அழகிரி ஆதரவில் திமுக வேட்பாளர் லதா அதியமான் வெற்றிபெற்றார். அதன்பிறகு ஒருமுறைகூட திமுகவால் இத்தொகுதியில் வெற்றிபெறவே முடியவில்லை. கடைசியாக நடந்த 3 தேர்தல்களிலும் அதிமுகவே வென்றது.

அதில் இருமுறை முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தொடர்ந்து வெற்றிபெற்றுள்ளார். தற்போது மூன்றாவது முறையாக அவர் வேட்பாளராக களம் இறங்க



உள்ளார்.

இத்தொகுதியில் தான் போட்டியிடுவதை உறுதி செய்த ஆர்.பி.உதயகுமார், கடந்த ஓராண்டுக்கு முன்பாகவே தொகுதியில் முகாமிட்டு நலத்திட்ட உதவிகள், மக்கள் பிரச்சினைகளைக் கையிலெடுத்து போராடுவது, கோயில் திருவிழாக்களுக்கு நன்கொடை அளித்துப் பங்கேற்பது, தொகுதி மக்கள், கட்சிக்காரர்கள் வீட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது, ‘பூத்’ கமிட்டி அமைத்து தேர்தல் பணியை மேற்கொள்வது என்று ஏதாவது ஒருவகையில் சந்தித்துக் கொண்டே வருகிறார்.

அதனால், திருமங்கலம் தொகுதி தேர்தல் பணிகளை எதிர்கொள்வது அவருக்கு மிக எளிதாக உள்ளது. ஜெயலலிதா மீது மிகுந்த விசுவாசம் கொண்ட ஆர்.பி.உதயகுமார், அவரது மறைவுக்குப் பிறகு டி.குன்னத்தூரிலே ஜெயலலிதாவுக்கு நினைவு மண்டபம் கட்டி வழிபடுகிறார். தற்போது தேர்தல் பணிகளில் ஈடுபடுவதற்கு வசதியாக இந்த நினைவு மண்டபத்திலேயே தங்கிவிட்டார்.

திருமங்கலம் தொகுதியில் திமுக சார்பில் அக்கட்சியின் புறநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் மணிமாறன் போட்டியிட உள்ளார். இந்த முறை இவரை எப்படியாவது வெற்றிபெற வைக்க முதல்வரின் மருமகன் சபரீசனே களமிறங்கி தேர்தல் ஆலோசனைகளை கட்சி நிர்வாகிகளுக்கு வழங்கி வருகிறார்.

எப்படியும் வெற்றிக்கொடி நாட்ட வேண்டும் என்று தேர்தல் பணிகளில் மணிமாறனும் தீவிரம் காட்டி வருகிறார். மக்களுக்கு பரிசு பொருள், பிரியாணி என ஆர்.பி.உதயகுமார் பாணியை இவரும் தொடர்கிறார்.

வாக்காளர்களின் ‘கவனிப்பு’ விஷயத்தில் தாராளம் காட்டவும் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. திமுகவினர் என்ன செய்தாலும், அதற்கு ஒரு படி மேலாகவே கவனிப்பு விஷயத்தை நாமும் செய்வோம் எனக்கூறி கட்சியினரை உற்சாகப்படுத்தி வருகிறார் உதய குமார்.

இதனால், திருமங்கலம் சட்டப்பேரவைத் தொகுதி பொதுத் தேர்தல், மற்றொரு இடைத் தேர்தல் போல் வேட்பாளர்கள் அறிவிப்புக்கு முன்பே களைகட்டத் தொடங்கி உள்ளது. பலத்த போட்டி காரணமாக இத்தொகுதியை சுற்றி அதிகாரி களின் சோதனை உள்ளிட்ட நட வடிக்கைகள் தீவிரமாகியுள்ளன. எனினும் திமுக பக்கம் அதிகாரிகள் பயத்துடனேயே அணுகுவதாக அதிமுகவினர் குற்றம் சாட்டி வருகின்றனர்.

# திருவையாறு தாலுக்கா அலுவலகத்தில் சட்டசபை தேர்தலை முன்னிட்டுதேர்தல் பொதுச் செலவீன பார்வையாளர் சஞ்சீவ்குமார் தலைமையில் கூட்டம்

தஞ்சாவூர் மார்ச். 22-

திருவையாறு தாலுக்கா அலுவலகத்தில் சட்டசபை தேர்தலை முன்னிட்டுதேர்தல் பொதுச் செலவீன பார்வையாளர் சஞ்சீவ்குமார் தலைமையில்

பறக்கும் படை, நிலையான கண்காணிப்பு குழு,வீடியோ கண்காணிப்பு குழு, தேர்தல் செலவு கணக்கிட்டு குழுவினருக்கான ஆலோசனை கூட்டம் நடந்தது கூட்டத்தில் தேர்தல் விதிமுறைகளை கடைப்பிடித்து

வேட்பாளர்களின் தேர்தல் செலவு கணக்குகளை கண்காணிக்க வேண்டும், வாக்காளர்களுக்கு விதிமுறை மீறி பரிசு பொருட்கள் வழங்குவதை தடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டது. இதில்




தேர்தல் நடத்தும் அலுவலர் கண்ணன் ,உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தாசில்தார் முருககுமார் , விவேகானந்தன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர் திருவையாறு தேர்தல் நடத்தும் அலுவலர் கண்ணன் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சியினருக்கான ஆலோசனை கூட்டத்தில் தேர்தல் விதிமுறைகள் கடைபிடிக்க வேண்டியது தொடர்பாக கட்சியினருக்கு ஆலோசனை வழங்கினார்.

இதே போல் தனியார் மண்டபத்தில் திருவையாறு சட்டசபை தொகுதிக்கு உட்பட்ட 340 ஓட்டுச்சாவடி நிலை அலுவலர்கான ஆலோசனை கூடத்தில் ஓட்டுச்சாவடி அலுவலர்களுக்கான பணிகள் , 85 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிடம் தபால் ஓட்டு பெறுவதற்கான பயிற்சி அளித்து தபால் ஓட்டு பெறுவதற்கான படிவம் 340 ஒட்டுச் சாவடி நிலை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.




# பூதலூரில் பறக்கும் படையினரால் 4,450 கிலோ ரேஷன் அரிசி பறிமுதல் செய்யப்பட்டது

தஞ்சாவூர் மார்ச். 22-

பூதலூர் அருகே விண்ணமங்கலம் பாலத்திற்கு அருகில் TN 49 CJ 4942 என்ற எண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தில் சுமார் 4450 kg (89 மூட்டை) ரேஷன் அரிசி இன்று நிலையான கண்காணிப்பு குழு பாவேந்தன் தலைமையில் காவலர்கள் சிவராஜ், அழகுவேல் ராஜன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்ட பொழுது அவ்வழியாக வந்த இந்த வாகனத்தில் அரிசி மூட்டைகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. உடனடியாக அவற்றை பறிமுதல் செய்து அந்த




வாகனத்தை ஓட்டி வந்த டிரைவர் தனுஷ் என்பவரை பிடித்து பூதலூர் வட்ட வழங்கல் அலுவலர் சுபாஷினிடம் ஒப்படைத்தனர். அவர்கள் உடனடியாக கைப்பற்றுகை செய்யப்பட்ட அரிசியினை பூதலூர் வட்டம் மனையேறிப்பட்டி கிராமத்தில் உள்ள வட்ட கிடங்கில் ஒப்படைத்தார். இது தொடர்பாக CS-CID unit inspector ஜெகதீசன் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொண்டுள்ளார்.



# திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்தில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் செங்கம் கிளை சார்பில் ரமலான் சிறப்புத் தொழுகை

செங்கம், மார்ச். 22-

2026 ரமலான் நோன்பை முன்னிட்டு தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் செங்கம் கிளை சார்பில் புதிய பேருந்து நிலையம் அருகே தீபம் நகர் தவ்ஹீத் மர்கஸ் திடலில் ரமலான் சிறப்புத் தொழுகை மற்றும் பிரார்த்தனை நடைபெற்றது.

இந்நிகழ்வில் தலைவர் முபாரக், செயலாளர் ஜலில், பொருளாளர் முகமது இல்யாஸ் ஆகியோர் தலைமையேற்று, நிர்வாகிகள் முன்னிலையில் தொழுகை நடைபெற்றது.

இதில் மாவட்ட பேச்சாளர் பர்கத்துல்லா கலந்து கொண்டு நபிகள்



நாயகம் போதனைகள், மனிதநேயம் மற்றும் பிறருக்கு உதவி செய்வதின் அவசியம் குறித்து உரையாற்றினார். எந்த எதிர்பார்ப்பும் இன்றி செய்யப்படும் உதவிகள் சொர்க்கத்தை அளிக்கும் என்றும், மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் துன்பம் அளிப்பது நரகத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தொழுகையில் பங்கேற்ற அனைவரும் ஒருவருக்கொருவர் கைகுலுக்கி ரமலான் வாழ்த்துகளை பகிர்ந்து மகிழ்ச்சி அடைந்தனர். மேலும், 200க்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

# மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தபால் மூலம் வாக்குப்பதிவு செய்ய வாக்காளர்களின் வீடுகளுக்கே நேரில் சென்று 12D படிவம் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் ஆய்வு

தேனி, மார்ச்.22-

தேனி மாவட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, 198.ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நாச்சியார்புரம் மற்றும் 199. பெரியகுளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேனி அல்லிநகரம் நகராட்சிப் பகுதிகளில் மூத்தகுடிமக்கள் (85 வயதிற்கு மேற்பட்டோர்) மற்றும் மாற்றுத்திறனாளிகள் தபால் மூலம் வாக்குப்பதிவு செய்ய வாக்காளர்களின் வீடுகளுக்கு சென்று 12ஞி படிவம் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199. பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று தேர்தல் நடைபெற உள்ளது. தேனி மாவட்டத்தில்





வாக்காளர்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், 100% வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையிலும் பல்வேறு துறைகளின் சார்பில் தேர்தல் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், வாக்குப்பதிவு நாளான்று வாக்குச்சாவடி மையங்களுக்கு நேரில் சென்று வாக்களிக்க இயலாத 85 வயதிற்கு மேற்பட்ட மூத்தகுடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்களின் வாக்குகளை உறுதி செய்யும் விதமாக அவர்களின் வீடுகளுக்கே நேரில் சென்று தபால் வாக்கினைப் பதிவு செய்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தேனி மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளிலும் 85 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்களின் வீடுகளுக்கு சென்று தபால் வாக்கு செலுத்துவதற்கான 12ஞி படிவம் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. படிவம் 12ஞி ஆனது வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் (BLO) நேரடியாக தொடர்புடைய வாக்காளர்களின் வீடுகளில் வழங்கப்பட்டு வருகிறது. இந்த படிவத்தை நிரப்பி வழங்கியவர்களுக்கு இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியான பிறகு வீடுகளுக்கே நேரில் சென்று அவர்களின் வாக்குகள் பெற்றுக்கொள்ளப்படும். இது தொடர்பான விவரங்களை அறிய 1950 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்.

இன்றைய தினம், 198.ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நாச்சியார்புரம் மற்றும் 199. பெரியகுளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேனி அல்லிநகரம் நகராட்சிப் பகுதிகளில் மூத்த குடிமக்கள் (85 வயதிற்கு மேற்பட்டோர்) மற்றும் மாற்றுத்திறனாளிகள் தபால் மூலம் வாக்குப்பதிவு செய்ய வாக்காளர்களின் வீடுகளுக்கே நேரில் சென்று 12D படிவம் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாயில் தேர்தல் நடத்தும் அலுவலர் தனித்துணை ஆட்சியர் கவிதா. உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / வட்டாட்சியர்கள்.சதீஸ்குமார் (தேனி).ஜாஹிர் உசேன் (ஆண்டிபட்டி), செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் .ஏ.எடிசன், தேனி அல்லிநகரம் நகராட்சி ஆணையாளர் செல்வி பார்கவி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# சிறப்பு விளையாட்டு விடுதிகளில் சேரமாணவ, மாணவிகள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம் 26ம் தேதி கடைசி நாள்

கிருஷ்ணகிரி, மார்ச். 22-

சிறப்பு விளையாட்டு விடுதிகளில் சேர மாணவ, மாணவிகள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க 26ம் தேதி கடைசி நாள் என்று அறிவிக்கப்படடுள்ளது.

இது தொடர்பாக கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் தினேஷ் குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் செயல்படும் சிறப்பு விளையாட்டு விடுதிகளில் கல்லூரிகளில் படிக்க கூடிய மாணவ, மாணவிகளுக்கு அறிவியல் சார்ந்த பயிற்சி, தங்கும் இடம், சத்தான உணவு வசதியுடன் விளையாட்டு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

விளையாட்டு விடுதி 20262027ம் ஆண்டிற்கான சிறப்பு நிலை மாணவ, மாணவிகளுக்கான சேர்க்கைக்கு 17 வயது முதல் 25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். 1.7.2001 அன்று அல்லது அதற்கு பின்னர் பிறந்தவராகவும், 1.7.2009 அன்று அல்லது அதற்கு முன்பு பிறந்தவராக இருக்க வேண்டும்.



இளநிலை சேர்க்கையாக 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்று கல்லூரிகளில் சேரும் மாணவ, மாணவிகள் சிறப்பு விளையாட்டு விடுதிகளில் சேர்க்கப்படுவார்கள். முதுநிலை சேர்க்கையாக 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்று கல்லூரிகளில் சேரும் மாணவ, மாணவிகள் சிறப்பு விளையாட்டு விடுதிகளில் சேர்க்கப்படுவார்கள்.

தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டு போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாணவ, மாணவிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். முதுகலை சேர்க்கைக்கு முதுநிலை பட்டபடிப்பு முதலாம் ஆண்டு படிப்பில் சேர்வதற்கு இளநிலை பட்டபடிப்பை முடித்திருக்க வேண்டும். இளநிலை படிப்பின் போது சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாணவ, மாணவிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விளையாட்டில் சிறந்து விளங்க கூடிய மாணவ, மாணவிகள் சிறப்பு விளையாட்டு விடுதி சேர்க்கை ஆன்லைன் விண்ணப்ப படிவத்தை இணையதள முகவரியில் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம். ஆன்லைன் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க கடைசி நாள் வருகிற 26ம் தேதி மாலை 5 மணிக்கு ஆகும். ஆனலைன் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும். மேலும் தகவல்களுக்கு தகவல் தொடர் மைய செல்போன் 95140 00777 என்ற எண்ணில தொடர்பு கொள்ளலாம். சிறப்பு விளையாட்டு விடுதியில் சேர விரும்பும் மாணவ, மாணவிகளுக்கு மாநில அளவிலான தேர்வு போட்டிகள் வருகிற 30ம் தேதி நடைபெறுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ராணுவத்தில் ஆள் சேர்ப்பு முகாமிற்கு தகுதி, விருப்பமுள்ள கிருஷ்ணகிரி இளைஞர்கள் இணையதளம் மூலம் விண்ணப்பக்க அழைப்பு

கிருஷ்ணகிரி, மார்ச். 22-

ராணுவத்தில் ஆள் சேர்ப்பு முகாமிற்கு தகுதியும், விருப்பமும் உள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த இளைஞர்கள், இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என கலெக்டர் தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கோயம்புத்தூர் ராணுவ ஆள் சேர்ப்பு அலுவலகம் மூலம் நடைபெறும் ராணுவ ஆள் சேர்ப்பு முகாமிற்கு தகுதியும், விருப்பமும் உள்ள இளைஞர்கள், வருகிற 1ம் தேதி வரை www.joinindianarmy.nic.in என்கிற இணையதளத்தில் விண்ணப்பிக்க கேட்டுகொள்ளப்பட்டுள்ளது. இம்முகாமில் கோயம்புத்தூர், திருப்பூர், சேலம், ஈரோடு, தேனி, நீலகிரி, மதுரை, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், தருமபுரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சார்ந்த இளைஞர்கள் பங்கு பெறலாம். மேலும், விண்ணப்பதார்களின் வயது வரம்பு 17.5 வயது முதல் 22 வயது வரையிலும், கல்வித்தகுதி 8ம் வகுப்பு தேர்வு முதல் 12ம் வகுப்பு மற்றும் தொழிற்கல்வி (ITI) உள்ளிட்டவையாகும். எனவே, இம்முகாமில் விருப்பமுள்ள இம்மாவட்ட இளைஞர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம் என தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

# பெரம்பலூரில் ரூ.95,184 மதிப்புள்ள பாத்திரங்கள் பறிமுதல்

பெரம்பலூர், மார்ச்.22-

பெரம்பலூர் சட்ட மன்ற தொகுதிக்கு உட்பட்ட நக்கசேலத்தில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு சென்ற பாத்திரத்தை வருமானவரித்துறை பறக்கும் படையினர் பறிமுதல் செய்து பெரம்பலூர் வருவாய் கோட்டாச்சியர் அனிதாவிடம் ஒப்படைத்தனர். சில்வர் குடம் 32, சில்வர் தவளை 30, பித்தளை சொம்பு 79 செப்பு சொம்பு 77, என மொத்தம் 218 பாத்திரங்கள் உள்ளன இதன் மதிப்பு ரூ.95,184 ஆகும்



# உதகை அரசு தாவரவியல் பூங்காவில் நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர், ஆட்சித்தலைவர், கொடியசைத்து துவக்கி வைத்தார்

உதகை, மார்ச்.22-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 யை முன்னிட்டு, நீலகிரி மாவட்டம் உதகை அரசு தாவரவியல் பூங்காவில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் குன்னூர் தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை, 109 கூடலூர் சட்டமன்ற தொகுதி பொது பார்வையாளர் எஸ். ஹரீஷ் , 109 கூடலூர் சட்டமன்ற தொகுதி செலவு கண்காணிப்பு பார்வையாளர் வைபவ் மாதவ் ராவ் ஆகியோர், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், கொடியசைத்து தொடங்கி வைத்து, சுமார் 1.5 கி.மீ தூரம் நடைபெற்ற




பேரணியில் கலந்து கொண்டார்கள்.

இந்த விழிப்புணர்வு பேரணியானது, உதகை அரசு தாவரவியல் பூங்காவில் தொடங்கி, சேரிங்கிராஸ், கமர்சியல் சாலை வழியாக காபிஹவுஸ் சந்திப்பில் நிறைவடைந்தது.

இப்பேரணியில் சுமார் 300க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டு, வாக்களப்பதன் அவசியம், அனைவரும் வாக்களிப்போம் உள்ளிட்ட விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பாதாகைகளை கையில் ஏந்தியபடி, வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர்கள்.

முன்னதாக, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 யை முன்னிட்டு, 109 கூடலூர் சட்டமன்ற தொகுதி பொது பார்வையாளர் திரு. எஸ். ஹரீஷ், , 109 கூடலூர் சட்டமன்ற தொகுதி செலவு பார்வையாளர் வைபவ் மாதவ் ராவ்ஆகியோர்,

மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், நடைபெறவுள்ள பொது தேர்தலில், அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தும் வகையில், விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தில் கையெழுத்திட்டு, விழிப்புணர்வு பணிகளை தொடங்கி வைத்தார்கள். மேலும், அருவங்காடு கார்டைட் தொழிற்சாலை சிலம்பம் அசோசியேசன் சார்பில் நடைபெற்ற சிறுவர்களின் சிலம்பம்பாட்ட நிகழ்ச்சியினை பார்வையிட்டு, கண்டு ரசித்தனர்.

இப்பேரணியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர் மகளிர் திட்ட இயக்குநர் மரு.ஜெயராமன், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், ஆவின் பொது மேலாளர் ராஜேஷ் குமார், மகளிர் சுய உதவிக்குழுவினர்கள், குன்னூர் தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ நேற்றைய தினம் தாராபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.வி. செந்தில்குமார் தலைமையில், ஏற்கனவே கழகத்தில் இணைந்த குகன் மற்றும் லோகேஷ் ஏற்பாட்டில்,மனிதவள மேலாண்மை துறை அமைச்சர்- திமுக மாநில மகளிர் அணி செயலாளருமான கயல்விழி செல்வராஜ் முன்னிலையில் 20'க்கும் மேற்பட்ட இளைஞர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர். மேலும் இந்நிகழ்வில், இளைஞர் அணி ஒன்றிய அமைப்பாளர் சன் பாலு,தளவாய்பட்டினம் ஊராட்சி செயலாளர் கணேஷ், திருமலை பாளையம் பிரதிநிதி செல்வராஜ், அமைப்பாளர் கனகராஜ், து. அமைப்பாளர் கோபிநாத் பங்கேற்றனர்

# சன்பிளவர் பிளே ஸ்கூலில் 14வது ஆண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது

பல்லாவரம் மார்ச். 22-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் அமைந்துள்ள சன்பிளவர் பிளே ஸ்கூலில் 14வது ஆண்டு விழா மிகுந்த உற்சாகத்துடன் நடைபெற்றது. ஜமீன் பல்லாவரம் பகுதியில் உள்ள ஆர்கிட் இன்டர்நேஷனல் ஸ்கூல் வளாகத்தில் இந்த விழா சன்ஃப்ளவர் ப்ளே ஸ்கூல் நிறுவனர் மற்றும் தாளாளர் பிரேமலதா தலைமையில் நடைபெற்றது.




பள்ளி நிர்வாகம், ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த ஆண்டு விழா, பல்வேறு கலை நிகழ்ச்சிகளால் களைகட்டியது. மாணவ மாணவிகள் நடனம், பாடல், நாடகம் உள்ளிட்ட பல திறமைகளை வெளிப்படுத்தி பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றனர்.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட டி.கிருதிகா தங்கதுரை அவர்கள், மாணவ மாணவிகள் நிகழ்ச்சிகளை பாராட்டி, அவர்களின் திறமைகளை மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஊக்கமளித்தார்.

மேலும், சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டு மாணவ மாணவிகள் உற்சாகப்படுத்தினார்

மாணவ மாணவிகள் சாதனைகள் மற்றும் திறமைகளை வெளிக்கொண்டு இந்த ஆண்டு விழா, அனைவருக்கும் நினைவில் நிற்கும் விதமாக மகிழ்ச்சியுடனும் சிறப்புடனும் நிறைவுற்றது.



■ ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு காவேரிப்பட்டினத்தில் உள்ள ஈத்கா மைதானத்தில் இஸ்லாமியர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர்.அதிகாலை முதலே மக்கள் கூடிவந்து அமைதியாக தொழுகை நடத்தினர்.பின்னர் ஒருவருக்கொருவர் ரம்ஜான் வாழ்த்துகளை பரிமாறிக் கொண்டனர்.சமூக ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

# வேப்பனப்பள்ளி அருகே முதுகெலும்பு தசைநார் சிதைவு நோயால்பாதிக்கப்பட்ட குழந்தையை காப்பாற்ற பெற்றோர் கோரிக்கை

கிருஷ்ணகிரி, மார்ச். 22-

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி அருகே 'ஸ்பைனல் மஸ்குலர் அட்ராபி வகை 1,' என்ற முதுகெலும்பு தசைநார் சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தையை காப்பாற்ற பெற்றோர் போராடி வருகின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி அடுத்த நல்லுபிர் கிராமத்தை சேர்ந்தவர் நாகேஷ்(34).டிரைவர். இவரது மனைவி சவுமியா(29). இவர்களுக்கு கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் திருமணமாகி, 6 வயதில் பெண் குழந்தை உள்ள நிலையில் கடந்த, 2025 ஆக.,31ல், ஆண் குழந்தை பிறந்தது. இந்த குழந்தைக்கு கடந்த இரு மாதங்களாக உடலில் இடுப்பிற்கு கீழ் கால்கள் அசைவின்றியும், கைகள் சரிவர இயங்காமலும் தலை நிற்காமலும் இருந்துள்ளது. அதிர்ச்சி அடைந்த பெற்றோர், கர்நாடகா மாநிலம், பெங்களூரு, ஆந்திர மாநிலம், குப்பத்தில் தனியார் மருத்துவமனைகளில் காண்பித்தனர். அங்கு எடுக்கப்பட்ட ரத்த பரிசோதனையில் குழந்தைக்கு முதுகெலும்பு தசைநார் சிதைவு நோய் இருப்பதை கடந்த,4ல், உறுதி செய்தனர். மேலும், மருத்துவ சிகிச்சைக்கு ரூ.16 கோடி செலவு ஆகும் என டாக்டர்கள் தெரிவித்தனர். குழந்தைக்கு உயிர் காக்கும் சொட்டு மருந்தின் விலையே ரூ.15,000 எனவும் கூறியுள்ளனர். இதையடுத்து, கிருஷ்ணகிரி, காந்தி சாலையில் உள்ள கிருஷ்ணகிரி அரசு மகப்பேறு மருத்துவமனையில் குழந்தையை சிகிச்சைக்காக பெற்றோர் சேர்த்தனர். அங்கு குழந்தைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து குழந்தையின் பெற்றோர் கூறியதாவது: எங்கள் குழந்தைக்கு முதுகெலும்பு தசைநார் சிதைவு நோய் இருப்பதாக டாக்டர்கள் கூறியது அதிர்ச்சி அளித்தது. சாதாரண குடும்பத்தில் சேர்ந்த நாங்கள், மருத்துவ செலவுக்கு ரூ.16 கோடி எப்படி தயார் செய்வது. எங்கள் குழந்தையை எவ்வாறு காப்பாற்றுவது என தெரியாமல் கண்ணீர் விட்டு வருகிறோம். மத்திய, மாநில அரசுகள், தன்னார்வலர்கள் உதவ முன் வர வேண்டும். கிருஷ்ணகிரி மருத்துவர்கள் குழந்தைக்கு சுவாசப் பிரச்சினை இருக்கிறது அதை சரி செய்தபின், சென்னை மருத்துவமனைக்கு அனுப்புவோம் என கூறுகின்றனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.





# மண்டல அலுவலர்கள் மற்றும் உதவி மண்டல அலுவலர்களுக்கு பயிற்சி

திண்டுக்கல் மார்ச். 22-

இந்திய தேர்தல் ஆணையத்தால் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெறுவது குறித்த கால அட்டவணை (Announcement of Election) கடந்த 15.03.2026அன்று வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்ற தொகுதிகளுக்கும் தேர்தல் நடத்தை விதிகள் தொடர்பாக புகார்கள் குறித்து விசாரணை மேற்கொள்வதற்கும், கண்காணிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் தனித்தனியாக குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் பணிக்கு நியமிக்கப்பட்டுள்ள மண்டல அலுவலர்கள் மற்றும் உதவி மண்டல அலுவலர்களுக்கு திண்டுக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், தலைமையில் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் உள்ள கூட்டுறவு கல்லூரியில் பயிற்சி நடத்தப்பட்டது. மேற்படி பயிற்சிக்கு திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்ற தொகுதிகளுக்கு நியமிக்கப்பட்ட 230 மண்டல அலுவலர்கள், 230 உதவி மண்டல அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பல்லாவரம் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் பிஎல்ஏ 2 ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது

பல்லாவரம் மார்ச். 22-



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி சார்பில் காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்(BDA), பூத் ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், மண்டலக்குழுத் தலைவர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழக செயலாளர்கள் த.ஜெயகுமார், இ.எஸ். பெர்னார்ட், ஏ.கே. கருணாகரன், ஒன்றிய செயலாளர் ஜி.கே. ரவி, மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன், பொதுக்குழு உறுப்பினர் மு.ரஞ்சன், தாம்பரம் மாநகர துணை செயலாளர் இரா.நரேஷ்கண்ணா, தகவல் தொழில்நுட்ப மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரவிச்சந்திரன், மாநகர இளைஞரணி அமைப்பாளர்கள் வீதினேஷ், மாநகர இளைஞரணி அமைப்பாளர் பிகேஏ சத்திய பிரபு, வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் நிர்வாகிகள், பகுதி வட்ட கழக நிர்வாகிகள், BLA-2, BDA, பூத் ஒருங்கிணைப்பாளர்கள் வாக்கு சாவடி நிலை முகவர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இறுதியில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் நன்றியுரை ஆற்றினார்

# கோவையில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரி விடுதிகள் மூடப்படுவதாக அறிவிப்பு

கோயம்புத்தூர், மார்ச்.22-

கோவையில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரி விடுதிகள் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கல்லூரி வகுப்புகள் நாளை மறுநாள் முதல் ஆன்லைனில் நடைபெறும் என கோவை தனியார் பொறியியல் கல்லூரி தெரிவித்துள்ளது. கடைசி செமஸ்டர் தேர்வுகள் நேரடியாக நடைபெறும் என்று கோவை தனியார் கல்லூரி அறிவித்துள்ளது






# நீலகிரி மாவட்டம் அருவங்காடு வெடிமருந்து தொழிற்சாலை ஐ என் டி யு சி தொழிற்சங்க 50வது ஆண்டு பொன்விழா

நீலகிரி மார்ச்.22-

குன்னூர், மத்திய அரசு கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் அருவங்காடு வெடிமருந்து தொழிற்சாலை உள்ளது இங்கு 2000க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர் இந்த தொழிற்சாலையில் பல்வேறு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றனர். இதில் ஐ என் டி யூ சி தொழிற்சங்கம் துவங்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவு பெற்றதை முன்னிட்டு தொழிலாளர்கள் சார்பில் பொன் விழா ஆண்டு கொண்டாடப்பட்டது இந்த விழாவில் மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சி மற்றும் சிறப்பாக பல்வேறு விளையாட்டு களில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கு நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது. இதில்அருவங்காடு வெடி மருந்து தொழிற்சாலையின் பொது மேலாளர் கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு நினைவு பரிசு வழங்கினார், இந்த விழாவில் அகில இந்திய தொழிலாளர்கள் சம்மேளம் தலைவர் அசோக் சிங் தலைமை வகித்தார், துணைத் தலைவர் குருதயால் சிங்,பொதுச் செயலாளர் சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக

கேரளாவின் ஐ என் டி யு சி மாநில தலைவர் சந்திரசேகரன்,

தமிழகத்தின் ஐ என் டி யு சி மாநில தலைவர் ஜெகநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் தொழிலாளர்களின் குடும்பத்துடன் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி அருகே யானை தாக்கி 2 பேர் படுகாயம்மின்வேலி அமைக்க வலியுறுத்தி கிராம மக்கள் சாலை மறியல்

கிருஷ்ணகிரி, மார்ச். 22-

கிருஷ்ணகிரி அருகே யானை தாக்கியதில் 2 பேர் படுகாயம் அடைந்தனர். பின்னர், யானைகள் ஊருக்குள் வராமல் தடுக்க மின்வேலி அமைக்க வேண்டும் என வலியுறுத்தி கிராம மக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், மேகலசின்னம்பள்ளி, வேப்பனப்பள்ளி, மகாராஜகடை சுற்றுவட்டாரத்தில் கடந்த 7 ஆண்டுகளாக 12 யானைகள் அட்டகாசம் செய்து வருகிறது. இதனால் விவசாயம் பாதிக்கப்படுவதுடன், ஒவ்வொரு ஆண்டும் உயிரிழப்புகளும் அதிகரித்து வருகிறது. இந்த யானைகள் பல்வேறு குழுக்களாக பிரிந்து அட்டகாசம் செய்து வருகிறது. இதில், மகாராஜகடை பகுதியில் சுற்றித்திரியும் ஒற்றை யானை இரவில் விளைநிலங்களில் சேதப்படுத்தியும், பகலில் காட்டு பகுதியில் முகாமிட்டுள்ளன. இந்நிலையில், சின்னமட்டாரப்பள்ளி அருகே கீழ்பூங்குருத்தி கிராமத்தை சேர்ந்த கொண்டப்பன்(70), கனகப்பன்(65) ஆகியோர் நேற்று காலை டீ குடிப்பதற்காக சாலையோரம் நடந்து சென்றனர். அப்போது, புதரில் மறைந்திருந்த ஒற்றை யானை, 2 பேரையும் தாக்கியது. இதில் கொண்டப்பனுக்கு காலில் எலும்பு முறிவும், தலையில் காயம் ஏற்பட்டது. கனகப்பனுக்கு லேசான காயம் ஏற்பட்டது. 2 பேரின் அலறல் சத்தம் கேட்டு, அங்கு கிராம மக்கள் யானையை விரட்டினர். மேலும், 2 பேரையும் உடனடியாக மீட்டு சிகிச்சைக்காக, கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவனைக்கு அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்து, யானைகளை அட்டகாசத்தை தடுக்க தவறியதாக கூறி வனத்துறையை கண்டித்து கிராம மக்கள், கிருஷ்ணகிரி குப்பம் தேசிய நெடுஞ்சாலையில், சின்னமட்டாரப்பள்ளி கிராமத்தில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் கூறியதாவது: யானைகளை ஊருக்குள் வராமல் தடுக்க வனத்துறையினர் இரவில் ரோந்து பணியில் ஈடுபட்டு கண்காணிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தும் கண்டுக் கொள்ளவில்லை. மேலும், யானைகள் ஊருக்குள் வராமல் நிரந்தரமாக அடர்ந்த வனப்பகுதிக்கு விரட்டி வேண்டும். 20 கி.மீ தூரத்திற்கு மின்வேலி, அகலி ஏற்படுத்த வேண்டும். யானை தாக்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும், என்றனர். தகவலறிந்து நிகழ்விடத்திற்கு வந்த பர்கூர் துணை காவல் கண்காணிப்பாளர் தனசேகரன், கிருஷ்ணகிரி வனச்சரக அலுவலர் முனியப்பன் மற்றும் போலீஸார் கிராம மக்களிடம் சமாதான பேச்சு வார்த்தை நடத்தினர். மேலும், தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலில் உள்ளது. எனவே, தேர்தலுக்கு பின்பு அனைத்து கோரிக்கைளும் நிறைவேற்றப்படும் என அலுவலர்கள் தெரிவித்தனர். இதனை ஏற்று பொதுமக்கள் மறியல் கைவிட்டு கலைந்து சென்றனர். 2 மணி நேரம் நடந்த மறியல் போராட்டம் காரணமாக, கிருஷ்ணகிரி குப்பம் சாலையில் நீண்ட தூரத்திற்கு வாகனங்கள் அணிவகுத்து நின்றதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# குன்னூர் அருள்மிகு ஸ்ரீதந்தி மாரியம்மன் திருக்கோயில் உபயதாரர்களின் கூட்டம்

நீலகிரி, மார்ச்.22-

நீலகிரி மாவட்டம் குன்னூரில் நூற்றாண்டு பழமை மிக்க அருள்மிகு ஸ்ரீ தந்திமாரியம்மன் திருக்கோயிலில் திருத்தேர் திருவிழா ஆண்டுதோறும் ஒரு மாததிற்கு மேல் நடைபெறும் இந்த கோயில் தமிழ்நாடு அரசு இந்து அறநிலைத்

துறையின் கீழ் இயங்கி வருகிறது.எதிர் வரும் ஏப்ரல் மாதம் 3 ம் தேதி கொடியேற்றத்துடன் தேர்திருவிழாநடைபெறும் வேறு எங்கும் இல்லாத நிலையில் இந்து முஸ்லீம் மற்றும் கிறிஸ்த்துவ மதத்தை சார்ந்தவர்கள் இணைந்து திருவிழாவினை நடத்தி வருகிறார்கள். தமிழக சட்டசபை தேர்தல் அறிவிக்கபட்டுள்ள நிலையில் தேர்தல் விதிமுறைகள் இருப்பதானால் திருவிழா நடைபெற குன்னூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் சார் ஆட்சியர் சங்கீதா தலைமையிலும் குன்னூர் காவல் துணை கண்காணிப்பாளர் ரவி மற்றும் குன்னூர் வட்டாட்சியர் செந்தில் ஆகியோர் முன்னிலையில் திருத்தேர் உபயதாரர்கள்




கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் காலை 6, மணி முதல் இரவு 10 மணிக்குள் தேர்திருவிழா அம்மன் ஊர்வலம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் வான வேடிக்கைகள்

முடிக்க வேண்டும்.

தேர்தல் நடைபெறும் நாளன்று ஊர்வலங்களுக்கு அனுமதிஇல்லை

என்றும் அமைதியான முறையில் அனைத்து உபயதாரர்களும் ஒத்துழைப்பு நல்கி திருத்தேர் திருவிழாவினை ஒற்றுமையுடன் நடத்த வேண்டும்என்று கூட்டம் நடைபெற்றது.

தேர்திருவிழா கூட்டத்திற்கான

ஏற்பாடுகளை கோயில் தக்கார் தமிழ்செல்வன் செயல் அலுவலர்ராஜேஷ் மணிகண்டன் அறநிலையத்துறை ஊழியர்கள் செய்திருந்தனர்.

இந்த கூட்டத்தில் அனைத்து உபயதாரர்களும் காவல் துறை அதிகாரிகளும் தீயணைப்புத்துறை

மின்சாரத்துறை உட்பட திரளாக கலந்து கொண்டனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்2026 முன்னிட்டு, திண்டுக்கல் மாவட்டம், 129 ஆத்தூர் சட்டமன்ற தொகுதி, நவாமரத்துப்பட்டியில் நிலையான கூர்ந்தாய்வுக் குழுவினரால் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டு வரும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.




# சாய்ராம் கல்லூரி சார்பில் சட்டமன்ற தேர்தலில் 100 சதவிகதிதம் வாக்களிக்க வலியுறுத்தியும், மாணவர்கள் உடற்பயிற்சி மேற்கொள்ளவும் மாரத்தன் நிகழ்ச்சி நடைபெற்றது

தாம்பரம் மார்ச். 22-

காஞ்சிபுரம் மாவட்டம் தாம்பரம் அருகே உள்ள சாய்ராம் பொறியியல் கல்லூரி சார்பில் வரும் சட்டமன்ற தேர்தலில் பொதுமக்கள் 100 சதவிகிதம் வாக்களிக்க வலியுறுத்தியும் மாணவர்கள் உடற்பயிற்ச்சி மேற்கொள்ளவும் மாரத்தன் ஓட்டம் விழிப்புணர்வு நடத்தபட்டது,இதனை சாய்ராம் கல்வி குழுமத்தின் தலைவர் சாய்பிரகாஷ் கொடியசைத்து துவக்கி வைத்தார்,இதில் கல்லூரி மாணவ,மாணவிகள் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு தாம்பரம் கிஷ்கிந்தா சாலை வழியாக சுமார் மூன்று கிலோ மீட்டர் மாரத்தான் ஓட்டத்தை நிகழ்த்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# ஸ்ரீவில்லிமேகமலை புலிகள் காப்பகத்தில் இருவாச்சி பறவைகள் கணக்கெடுப்பு

ஸ்ரீவில்லிபுத்தூர், மார்ச்.22-

ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகத்தில் இருவாச்சி பறவைகள் கணக்கெடுப்பு இன்று முதன்முறையாக நடந்தது. இதில், 200க்கும் மேற்பட்ட வனத்துறை ஊழியர்கள் கலந்து கொண்டனர். விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகத்தில் ஏராளமான வனவிலங்குகளும்,



இருவாச்சி பறவைகள் உள்ளிட்ட அரிய வகை பறவைகளும் ஏராளமாக வசித்து வருகின்றன.

இந்த நிலையில் புலிகள் காப்பகத்தில் உள்ள இருவாச்சி பறைகளை கணக்கெடுப்பு முதன்முறையாக இன்று காலை தொடங்கி நடைபெற்றது. இதில் வனத்துறையினர், தன்னார்வலர்கள், பறவை ஆர்வலர்கள் என சுமார் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்த பணி இன்று ஒரு நாள் மட்டும் நடைபெறுவதாக வனத்துறையினர் தெரிவித்தனர்

# வணிக பயன்பாட்டு சிலிண்டர் தட்டுப்பாட்டு காரணமாக அண்ணாமலையார் கோயிலில் இலவச லட்டு பிரசாதம் நிறுத்திவைப்பு

திருவண்ணாமலை, மார்ச்.22-

திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோயிலில் சாமி தரிசனம் செய்யும் பக்தர்களுக்கு இலவசமாக லட்டு பிரசாதம் வழங்கப்பட்டு வந்த நிலையில் வணிக பயன்பாட்டு சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக லட்டு பிரசாதம் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.

உலக பிரசித்தி பெற்ற பஞ்சபூத ஸ்தலங்கள் அக்னிசலமாக விளங்கும் அண்ணாமலையார்




திருக்கோயில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆந்திரா கர்நாடகா தெலுங்கானா உள்ளிட்ட பல்வேறு வெளிமாநிலங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் விடுமுறை நாட்கள் மட்டுமல்லாமல் தினந்தோறும் திருவண்ணாமலைக்கு வருகை புரிந்து அண்ணாமலையாரை தரிசனம் செய்து வருகின்றனர்.

கோயிலுக்கு சாமி தரிசனம் மேற்கொள்ள வரும் பக்தர்களுக்கு கோயில் நிர்வாகத்தின் சார்பில் இலவசமாக லட்டு பிரசாதம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது ஏற்பட்டுள்ள மேற்காசிய நாடுகளில் ஏற்பட்டுள்ள போர் சூழ்நிலை காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இதனால், வணிக பயன்பாட்டு சிலிண்டர்கள் தட்டுப்பாடு நிலவி வருவதால் அண்ணாமலையார் திருக்கோயிலில் இலவசமாக வழங்கப்பட்டு வந்த லட்டு பிரசாதம் நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் கோயில் வளாகத்தில் உள்ள பிரசாத விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வந்த முறுக்கு, அதிரசம் எல்லடை போன்ற பிரசாத பொருட்களின் விற்பனையும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

# முன்னாள் ராணுவ வீரர்களுக்கு தேர்தல் பணியாற்ற காவல் துறை அழைப்பு

சென்னை, மார்ச்.22-

தேர்தல் பணியாற்ற முன்னாள் ராணுவ வீரர்களுக்கு சென்னை காவல் துறை அழைப்பு விடுத்துள்ளது. தமிழக சட்டப் பேரவை தேர்தல் வாக்குப்பதிவு அடுத்த மாதம் 23ம் தேதி ஒரே கட்டமாக நடைபெற உள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் முழுவீச்சில் செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, 'தேர்தல் பணியாற்ற விருப்பம் உள்ள முன்னாள் ராணுவ வீரர்கள் விண்ணப்பிக்கலாம்' என சென்னை காவல் துறை தேர்தல் பிரிவு அதிகாரிகள் அறிவிப்பு வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: சட்டப் பேரவை தேர்தலை முன்னிட்டு, தேர்தல் பணியாற்ற விருப்பம் உள்ள ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரிகள், போலீஸார், முன்னாள் ராணுவ வீரர்




கள் மற்றும் முன்னாள் துணை ராணுவ வீரர்கள் தாங்கள் வசிக்கும் பகுதிக்கு உட்பட்ட சென்னை காவல் இணை ஆணையர் அலுவலகத்தில் செயல்படும் தேர்தல் பிரிவு ஆய்வாளரைத் தொடர்பு கொண்டு வரும் 26ம் தேதிக்குள் தங்களின் பெயர், முகவரியை பதிவு செய்துகொள்ளவும்.

தேர்தலில் பணிபுரிவோருக்கு அரசால் நிர்ணயிக்கப்படும் ஊதியம் பெற்றுத் தரப்படும்.

விருப்பம் உள்ளவர்கள் சென்னை வடக்கு மண்டல ஆய்வாளர் ஆனந்த் 9498145519, மேற்கு மண்டல ஆய்வாளர் சாந்தினி தேவி 9840106030, கிழக்கு மண்டல ஆய்வாளர் பத்மகுமாரி 9498197388, தெற்கு மண்டல ஆய்வாளர் துர்கா தேவி 9498003162 ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது



# திருப்புளிங்குடி காய்சினி வேந்தப் பெருமாள் கோவிலில் தெப்போற்சவம்: திரளான பக்தர்கள் தரிசனம்

ஸ்ரீவைகுண்டம், மார்ச்.22-

நவதிருப்பதிகளில் மூன்றாவது திருப்பதியான திருப்புளிங்குடி காய்சினிவேந்தப்பெருமாள் கோவிலில் தெப்போற்சவம் நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். தாமிரபரணி நதிக்கரையோரம் அமைந்துள்ள நவதிருப்பதி கோயிலுக்கு என தனி சிறப்பு ஆன திருப்புளிங்குடி காய்சினி வேந்தப் பெருமாள் கோவிலில் தெப்போற்சவம் நேற்று நடந்தது. காலை 7 மணிக்கு விஸ்வரூபம், 8 மணிக்கு நித்தியல், 9.15 மணிக்கு மாடவீதி புறப்பாடு நடந்தது.

11.15 மணிக்கு சிறப்பு திருமஞ்சனம், பின்னர் தீபாராதனை, நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பாடல்கள் பாடப்பட்டன. பின்னர் ஸ்தலத்தார்கள் சீனிவாசன். திருவேங்கடத்தான், பட்சி ராஜன், சேஷகிரி, அனந்த வெங்கடேசன், மதுரகவி, அனந்த ஆழ்வான் ஆகியோர் சேவித்தனர். சாத்துமுறை முடிந்து, தீர்த்தம் சடாரி பிரசாதம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. மாலை 5 மணிக்கு சாயரட்சை, உற்சவர் காய்சினவேந்தன் தாயார்களுடன் வாகன குறட்டிற்கு எழுந்தருளினார். பின்னர் தொட்டி பல்லக்கில் சாற்றப்பட்டு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. 9.15 மணிக்கு தெப்பத்தில் காட்சி தந்தார். 12 சுற்று நடந்தது



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம், 52 பர்கூர் சட்டமன்ற தொகுதி, பர்கூர் பேரூராட்சியில், 85 வயதுக்கு மேற்பட்ட பிள்ளையார் கோயில் தெருவில் வசிக்கும்

பொட்டியம்மாள் அவர்களின் விருப்பத்தின் பேரில் படிவம் "12டி (12ஞி)" வழங்கும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் பர்கூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் அபிநயா, வட்டாட்சியர் சின்னசாமி ஆகியோர் உள்ளனர்.



# கிருஷ்ணகிரியில் வாகன தணிக்கையில் ரூ.1 லட்சம் பறிமுதல்

கிருஷ்ணகிரி, மார்ச்.22-

கிருஷ்ணகிரி 53 சட்டமன்றத் தொகுதியில் SST குழுவினர் குப்பம் சாலை அரசு பாலிடெக்னிக் அருகே வாகன தணிக்கையில் ஈடுபட்டனர்.அப்போது AP 39 பியி 1930 காரில் ஆவணம் இன்றி ரூ.1,00,000 எடுத்துவரப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

ஆந்திர மாநிலத்தை சேர்ந்த நாராயண ரெட்டியிடம் இருந்து பணம் பறிமுதல் செய்யப்பட்டது. பறிமுதல் செய்யப்பட்ட தொகை உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் வட்டாட்சியர் ரமேஷ் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# பழனி பாஜக நிர்வாகியால் தனது உயிருக்கு ஆபத்து அடியாட்களை வைத்து தொலைபேசியிலும், நேரிலும் வந்து மிரட்டல் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு வழங்க கோரிக்கை

பழனி மார்ச். 22-

பழனி அடுத்த வயலூர் பகுதியைச் சார்ந்தவர் மகுடீஸ்வரன். இவர் பழனி நிதி நிறுவன உரிமையாளர் சங்கத்தின் தலைவராகவும், திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினராகவும் இருந்து வருகிறார். மகுடீஸ்வரன் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாக பாரதிய ஜனதா கட்சியில் மாவட்ட செயலாளராக இருந்தார், அப்போது மகுடீஸ்வரனுக்கு பாராளுமன்றத் தேர்தலில் பாஜக சார்பில் திண்டுக்கல் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு பெற்று தருவதாக கூறி பாரதிய ஜனதா கட்சியின் மாவட்ட தலைவராக இருந்த கனகராஜ் , மாநில



பொதுசெயலாளர் ராம சீனிவாசன் மற்றும் சில பாஜக நிர்வாகிகள் பணம் பெற்றுள்ளனர். பாஜக நிர்வாகிகள் கூறியபடி மகுடீஸ்வரனுக்கு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு பெற்றுத்தராததால் அதிருப்தி அடைந்த மகுடீஸ்வரன் பாரதிய ஜனதா கட்சியிலிருந்து விலகினார். மேலும் திமுகவில் தன்னை இணைத்துக் கொண்டார். தற்போது திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டு கட்சிப் பணியை செய்து வருகிறார். தன்னை ஏமாற்றி வாங்கிய பணத்தை பாஜக நிர்வாகி கனகராஜ் இடம் மகுடீஸ்வரன் திருப்பி கேட்டதாக கூறப்படுகிறது. இதனால் ஆவேசம் அடைந்த கனகராஜ் மற்றும் அவருடைய ஆதரவாளர்கள் தொடர்ந்து மகுடீஸ்வரனை செல்போன் மூலம் அழைத்து தகாத வார்த்தையால் பேசி கொலை மிரட்டல் விடுத்து வருவதாகவும், தான் செல்லக்கூடிய இடங்களுக்கு வந்து அடியாட்களை வைத்து கனகராஜ் அனுப்பிய ஆட்கள் மிரட்டி வருவதாக மகுடீஸ்வரன் காவல் நிலையத்தில் ஆதாரங்களுடன் புகார் அளித்துள்ளார். புகாரைப் பெற்ற போலீசார் விசாரணை நடத்தி வழக்குப்பதிவு செய்யாமல் காலம் தாழ்த்துவதாகவும், பாஜக நிர்வாகி கனகராஜ் மற்றும் அவரது ஆதரவாளர்களான பாலசுப்பிரமணி, கருப்புசாமி, ஆனந்த் ,நாச்சிமுத்து உள்ளிட்ட நபர்களால் தனது உயிருக்கும், தனது குடும்பத்தினரின் உயிருக்கும் அச்சுறுத்தல் இருப்பதாகவும், தனது உயிருக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் அதற்கு பாஜக நிர்வாகி கனகராஜ் தான் காரணம் எனவும் மகுடீஸ்வரன் தெரிவித்துள்ளார். மேலும் தான் அளித்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து கனகராஜ் மற்றும் பாஜக நிர்வாகிகளை கைது செய்ய வேண்டும். தனக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார். தேர்தலில் போட்டியிட வாய்ப்பு பெற கொடுத்த பணத்தை திருப்பி கேட்டதால் பாஜக நிர்வாகி , தொழில் அதிபருக்கு கொலை மிரட்டல் விடுத்து அச்சுறுத்துவதாக புகார் எழுந்துள்ளது பழனியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161